செ.வெ.எண்:19 நாள்-07.09.2021

# பத்திரிக்கைச் செய்தி

பத்திரப்பதிவுத்துறையில் ஒரு நிலத்தை வாங்கும்போது பத்திரப்பதிவு தனியாகவும், பட்டா மாறுதல் தனியாகவும் செய்ய வேண்டி இருந்தது. ஆனால் தற்போது, பத்திரப்பதிவின்போது தானாக பட்டா மாறுதல் ஏற்படுவதற்கான வழிமுறையை அரசு செய்துள்ளது. இந்த நடைமுறை கடந்த இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக இருந்து வருகிறது. இதன் காரணமாக, பத்திரப்பதிவின்போது, சொத்து உரிமையாளரின் ஆதார் எண் மற்றும் செல்போன் எண் ஆகியவற்றை பதிவு செய்வது கட்டாயம் என அரசு அறிவித்துள்ளது. “ஒரு சொத்தின் ஆவணப்பதிவின்போது ஆவணதாரர்களின் செல்போன் எண்ணை அளிக்காமல் வேறு நபர்களின் செல்போன் எண்ணை அளித்திருப்பதும், ஒரே மொபைல் எண் பல்வேறு ஆவணங்களுக்கு உள்ளீடு செய்யப்பட்டுள்ளதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனால் ஆவணங்கள் குறித்து தவறான செயல்முறைகள் ஏற்பட வாய்ப்புள்ளது. இனி வரும் காலங்களில் இந்நிலை தொடராமல் இருப்பதற்காக, ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்ட செல்போன் எண்ணையும், பட்டா மாறுதலுக்கான ஆவண விவரங்களை ஆன்லைனில் உள்ளீடு செய்யும்போது தங்களின் சரியான செல்போன் (கைபேசி) எண்ணை ஆவணத்தில் தெளிவாக எழுத பொதுமக்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

மேலும், அதிகமாக பயன்படுத்தப்பட்ட செல்போன் எண்கள் ஆவண எழுத்தர் அல்லது அவரின் அலுவலகத்தில் வேலை செய்யும் நபருடையதாக இருப்பின் அவ்ஆவண எழுத்தர் மேல் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்” எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த உத்தரவின் காரணமாக, பட்டா மாறுதல் விவகாரங்களில் நடந்து வரும் லஞ்ச லாவண்யங்கள் குறைய வாய்ப்பிருக்கிறது.

எனவே பட்டா மாற்றம் தொடர்பான ஆவணப்பதிவுகளுக்கு பொதுமக்கள் அவரவர் பயன்படுத்தும் கைபேசி எண்ணினை உள்ளீடு செய்யலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**